தமிழ்நாடு சட்டப் பேரவை.

சனிக்கிழமை, 1969, மார்ச் 1

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப்பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. வினாக்கள்—விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண்கள் 111 முதல் **118** வரை பிறகு எடுத்துக்கொள்ளப்படும்.

நடமாடும் மருந்தகங்கள்.

*119 **வினா—திரு. கொளத்தூர் கோதண்டம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார, அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் எத்தனை நடமாடும் மருந்தகங்கள் (Mobile Health Units) செயல்படுகின்றன ?

(இ) பல நடமாடும் மருந்தகங்களில் வேன்கள் நீண்ட நாட்களாக பழுதடைந்திருப்பது அரசுக்குத் தெரியுமா ?

(உ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : (அ) பதினொன்று.

(இ) & (உ) பழுதடைந்த மூன்று வேன்களை நீக்கி புதியன வாங்குவது சம்பந்தமாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கின்றன.

திரு. கொவத்தூர் கோதண்டம் : தலைவர் அவர்களே, அங்கே பழுதடைந்த வண்டிகளை சரிபார்ப்பதற்கு ஏறக்குறைய, 3, 4 மாதங்கள் ஆகின்றன. இதுவரையில் சம்பந்தப்பட்ட டாக்டர்கள் அந்த யூனிட்டிலே பணியாற்றுமல் எந்த வேலையும் செய்யாமல் சும்மா இருந்துகொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட நேரங்களில் அந்த மருத்துவர்களை பிற மருத்துவ மனைக்குச் சென்று வேலை செய்ய ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : கூடுமானவரையில் எவ்வளவு விரைவிலே அவற்றைப் பழுதுபார்க்கமுடியுமோ, அந்த அளவிற்கு அந்தப் பணியைச் செய்துகொண்டு வருகிறார்கள். இதுவரையில் டாக்டர்கள் வேறு பல வாகனங்கள் மூலமாகத்தான் தங்கள் பணிகளை ஆற்றிவருகிறார்கள்.

திரு. சா.மெய்யப்பன் : ஹெல்த் யூனிட்டுகளிலே இருக்கிற பழுதடைந்த வேன்களை பழுது பார்ப்பதற்கு சர்க்கார் பஸ் பணிமனைகளிடம் ஒப்படைக்கின்ற யோசனை அரசுக்கு இருக்கிறதா ?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து: இது பற்றிய தகவல் இப்போது இல்லை.

பின்தங்கிய வகுப்பினர் பட்டியல்

*120 **வினா—திரு. ந. தருமலிங்கம் :** மாண்புமிகு பொதுச் சுகாதார அரிசன நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பின்தங்கிய வகுப்பினர் பட்டியலில் புதிதாக வகுப்பு எதுவும் சேர்க்கும் செயற்குறிப்பு அரசுக்கு உண்டா ?